மனிதவள மேலாண்மை (எஸ்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

<u>கடித எண்.4094530/எஸ்2/2023-1, நாள் 06.03.2023</u>

அனுப்புநர்
திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து துறை அரசு செயலாளர்கள், தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009. (இணைப்புடன்)
அனைத்து துறைத் தலைவர்கள். (இணைப்புடன்)
அனைத்து மாவட்ட நீதிபதிகள். (இணைப்புடன்)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள். (இணைப்புடன்)
பதிவாளர் (நிர்வாகம்), சென்னை உயர்நீதிமன்றம், சென்னை – 600 104. (இணைப்புடன்)
பதிவாளர் (நிர்வாகம்), சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை,
மதுரை – 625023. (இணைப்புடன்)

ஐயா / அம்மையீர்,

பொருள்: பொதுப் பணிகள் – தகுதிகாண் ஆணைகள் திருப்திகரமாக நிறைவடைந்ததற்கான அறிக்கை – அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன – தாமதமாக ஆணை வெளியிடும் நேர்வுகளில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளல் – மீண்டும் வலியுறுத்துதல் – தொடர்பாக

பார்வை: அரசு கடித எண்.14735/எஸ்/2010-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எஸ்)த் துறை, நாள். 08.04.2010.

••••••••

பார்வையில் காணும் கடிதத்தில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 27ன்படி, உரிய அதிகாரிகளால் தகுதிகாண் பருவத்தை மனநிறைவாக முடித்ததற்கான ஆணைகள் சரியான நேரத்தில் வழங்கப்படா விட்டால், துறைகளின் அரசு செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் அத்தவறுகளுக்கு பொறுப்பான மேற்பார்வை அலுவலர்கள் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம் என அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகள் நீக்கப்பட்டு, தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 என புதிய சட்டம் இயற்றப்பட்டு 16.09.2016 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதில், மேலே குறிப்பிடப்பட்ட பொது விதி 27-ன் பொருண்மை தற்போது மேற்படி சட்டத்தின் பிரிவு 32-ல் கூறப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், அரசு ஊழியர்களின் தகுதிகாண் பருவம் விளம்புகை ஆணைகள் வெளியிடுதல் தொடர்பாக பார்வையில் காணும் அரசு கடிதத்தில் அறிவுறுத்தப்பட்ட அறிவுறுத்தங்களின் படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 32-ன் படி உரிய காலத்திற்குள் தகுதிகாண் பருவ விளம்புகை ஆணைகளை உரிய நேரத்தில்

(கு.பியா)

வெளியிடுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து நியமன அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு உரிய காலத்தில் ஆணைகள் வெளியிடாமல் வீண் காலதாமதம் ஏற்படுத்தும் அலுவலர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு (ம) மேல் முறையீடு) விதிகளின் கீழ் உரிய நடவடிக்கை எடுப்பதை வலியுறுத்திட, அனைத்து அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக.

__நகல்:-__

அனைத்து பிரிவுகள்,
மனித வள மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

Personnel and Administrative
Reforms (S) Department.
Secretariat,
Chennai-9.

**Letter No.14735/S/10-1, Dated 8.4.2010.**

From

Thiru. K.N. Venkataramanan, IAS,
Secretary to Government.

To

All Secretaries to Government, Chennai-9.
All Heads of Departments.
All District Judges.
All District Magistrates.

Sir,

Sub: Establishment - Declaration of satisfactory completion of probation - Orders to be issued in time - Instructions - Issued.

Ref: G.O. Ms. No.24, Personnel and Administrative Reforms (AR I) department, dated 17.2.2010.

****

As per rule 27 of General Rules for Tamil Nadu State and Subordinate Services, at the end of the period of probation the appointing authority shall assess the suitability of the probationer for full membership and if the probationer is found suitable for such membership, he shall as soon as possible issue an order declaring the probationer to have satisfactorily completed his probation. If no such order is issued within six months from the date on which he is eligible for such declaration, the probationer shall be deemed to have satisfactorily completed his probation on the date of expiry of period of probation. However, a formal order declaring the completion of probation has to be issued by the appointing authority.

2. The Administrative Reforms Committee in its first report has recommended that Departmental action shall be effected against Supervisory Officers who do not issue orders on satisfactory completion of probation of any staff working under him. In the Government Order cited Government have accepted the above said recommendation.

3. If orders of satisfactory completion of probation are not issued in time by the competent authorities, the Secretaries to Government of the Departments and the Heads of Departments may take appropriate disciplinary action against the supervisory officers for the lapses.

Yours faithfully,

9/4/10

for Secretary to Government.

9/4/10

Copy to:-

All Officers / All Sections in Personnel and Administrative Reforms Department, Chennai-9.